# பொங்கல்தினத்தில் யுத்தநிறுத்தமாயிருந்தும் பல இடங்களிலும் தாக்குதல்; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)
தைப்பொங்கல் தினத்தில் யுத்தநிறுத்தம் செய்யப்போவதாக அறிவித்த சிறிலங்கா படைகள் பல இடங்களில் நடத்திய தாக்குதலினால் பல பொதுமக்கள் காயமடைந்ததுடன், வீடுகள் பன சேதம் அடைந்தன.
நேற்றுமுன்தினம் வவுனியா நகரில் பொருள்களை வாங்க வந்த பொதுமக்கள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 15 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.
[4ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 தை 3 ஐ. ஆகிர் பிறை 29 இதழ்: 265
யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-1-1991

## வடபகுதி வர — யாழ். அரச அதிபருக்கு இராணுவம் தடை

[யாழ்ப்பாணம்]
யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கடந்த சனிக்கிழமை கொழும்பிலிருந்து வாகனம் ஒன்றில் வடபகுதிக்கு வரும் வழியில் மதவாச்சியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் திருப்பி அனுப்பட்டதாகத் தெரியவருகிறது.

தற்போது கொழும்பில் தங்கிநிற்கும் அவர் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.
(153)

# ★ வளைகுடாவில் — போரா? சமாதானமா? முடிவு இன்று தெரியவரும்!

### வீரமரணம்

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பழை டச்சு வீதியிலுள்ள புலிகளின் பாதுகாப்பு அரணை நோக்கி நேற்று இராணுவம் நடத்திய தாக்குதலில் திருமலை தோப்பூரைச்
(4-ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சி தொடர்கிறது

(ஜெனீவா)
வளைகுடாவில் போரா? சமாதானமா? என்பது இன்று காலை 10-30 மணிக்குப்பின் தெரிந்துவிடுமென்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் இதற்குப் பின்னரும் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாமென்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று காலை 10-30ற்கு முன் குவைத்திலிருந்து ஈராக் வெளியேற வேண்டுமென்ற ஐ. நா. சபையின் கோரிக்கைக்கு நேற்று நள்ளிரவுவரை ஈராக் பதிலெதுவும் அளிக்கவில்லை.

இந்தக் காலக்கெடு எவ்வித காரணம் கொண்டும் நீடிக்கப் படமாட்டாது என்று ஐ. நா. சபை அறிவித்துள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## போதிய எரிபொருள் கையிருப்பில் இருக்கிறது

(கொழும்பு)
வளைகுடாவில் யுத்தம் ஏற்பட்டாலும் இலங்கையில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படமாட்டாது என்று எரிபொருள் மின்சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## 4-ம் கட்ட நிவாரணத்தில் அரிசி வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)
4ம் கட்ட விசேட இலவச உணவு விநியோகத்தின்போது யாழ். மாவட்டத்தில் அரிசி வழங்கப்படவுள்ளது.
போதியளவு அரிசி, பருத்தித்துறைக்கு வரவுள்ள கப்பலில் வரவிருக்கிறது. (153)

## பிரான்ஸின் ஆலோசனைக்கு மூன்று நாடுகள் எதிர்ப்பு

(பாரிஸ்)
வளைகுடாவில் போரைத் தவிர்க்க பிரான்ஸ் மேற்கொள்ளும் புதிய திட்டத்திற்கு அமெரிக்கா, பிரிட்டன், சோவியத் யூனியன் ஆகியன எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறுவதற்கு ஐ. நா. விதித்த காலக்கெடு நீடிக்கப்படமாட்டாது என ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. பெரஸ்டி குயிலர் தெரிவித்தார்.

பிரான்ஸின் புதிய திட்டம் இஸ்ரேலுக்கும், பலஸ்தீனிய
(4-ம் பக்கம் பார்க்க)

## 'ஷெல்' தாக்கி ஒருவர் காயம்

(நல்லூர்)
பலாலியிலிருந்து நேற்று ஏவப்பட்ட 'ஷெல்' ஒன்று ஏழாலைச் சந்தியில் விழுந்து வெடித்த போது அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த ரி செல்லையா என்பவர் காயமடைந்தார்.
அவர் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (152)

## ஊசி மூலம் நஞ்சூட்டப்பட்டு மாணவன் படுகொலை

(மட்டக்களப்பு)
சிறிலங்கா இராணுவத்தினரால் மாணவர் ஒருவர் ஊசி மூலம் நஞ்சு ஏற்றப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
களுதாவளையைச் சேர்ந்த மட்டுநகர் சிவானந்தாக் கல்
(4-ம் பக்கம் பார்க்க)

## விலைவாசி உயர்வை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு

[மாங்குளம்]
வாழ்க்கைச் செலவு உயர்வை எதிர்த்து எதிர்க்கட்சியினர் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடாத்தவுள்ளனர்.
விலைவாசி உயர்வை எதிர்த்து கொழும்பில் 1 லட்சம் ஆதரவாளர்கள்கொண்ட மாபெரும் ஆர்ப்பாட்டக் கூட்டம் ஒன்றை நடாத்த எதிர்க்கட்சியினர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது.
இந்த எதிர்ப்புக் கூட்டம் இம்மாத இறுதியில் அல்லது
[4-ம் பக்கம் பார்க்க]

## மரண தண்டனை

(பளை)
கடந்த வாரம் கிளாலி தென்னந்தோட்டம் காவலாளியை குத்திக் கொன்றமைக்காகவும், கிளாலிப் பகுதியில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டமைக்காகவும் கிளாலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு நேற்று பளையில் மரண தண்டனை வழங்கப்பட்டது.

## வளைகுடா பகுதியில் அமெரிக்க படைபலம்

(வாஷிங்டன்)
வளைகுடாவில் ஈராக்கிற்கு எதிராக யுத்தமொன்றில் ஈடுபடவுள்ள அமெரிக்க படைபலம் பற்றிய விபரத்தை 'பென்டகன்' வெளியிட்டுள்ளது
துருப்புகள்: 3,60,000 வீரர்கள். இவர்கள் சவூதி அரேபியாவிலும் அதைச் சுற்றிய பகுதிகளிலும் நிலைகொண்டுள்ளனர். இந்த எண்ணிக்கை ஜனவரி மாதமுடிவில் 4,30,000 ஆக அதிகரிக்கப்படும்.
(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தாக்குதல் வலி. வடக்கில் அதிகரிப்பு

(காங்கேசன்துறை)
வலி-வடக்கில் நேற்று இராணுவத் தாக்குதல்கள் அதிகரித்திருந்தன.
நேற்றுக் காலை தொடக்கம் பலாலியில் இருந்து தொடர்ந்து ஷெல் தாக்குதல் இடம்
(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

தமிழ் தட்டச்சு இயந்திரம் ஒன்று உடனடியாக தேவை. தொடர்பு: செயலாளர், வட மாகாண அரசாங்க ஒப்பந்த காரர் சங்கம், 15, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.
(சி 4267)

### எழுதுவினைஞர் தேவை

தமிழ் / ஆங்கில கடிதங்கள் எழுதக்கூடியவராகவும், தமிழ்/ ஆங்கில தட்டெழுத்தில் நல்ல அனுபவம் பெற்ற ஒரு எழுதுவினைஞர் உடன் தேவை. ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். உங்கள் விண்ணப்பங்களை கீழ்வரும் விலாசத்தில் 20.01.91க்கு முன் நேரில் சமர்ப்பிக்கவும். செயலாளர், வட மாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம், 15, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குழி.

### "இருள் இரவில் அல்ல"

மீரா வெளியீடு "முடிவல்ல ஆரம்பம்" நாவலாசிரியர் சிதம்பரசி திருச்செந்திநாதன் எழுதியது: "எந்த ஒரு பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக்கூடாது இழந்தால்?" விற்பனையாகின்றது தூர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம் திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தசாலைகளிலும்.
(சி 4266)

### மணமகன் தேவை

யாழ். இந்து நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் 29 வயது CIMA இறுதிப் பரீட்சைக்குப் படிக்கும் கிரக பாவமற்ற அழகிய மகளுக்கு மணமகன் தேடுகின்றனர். விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:- 4263 மே/பா ஈழ நாடு லிமிட், யாழ்ப்பாணம்.
(சி-4263)


## அச்சுவேலியில் 27 ஆசிரியர்கள் ஓய்வு பெற்றனர்

(அச்சுவேலி)

அச்சுவேலி கொத்தணி அமைப்பில் கொத்தணி அதிபர் உட்பட 27 ஆசிரியர்கள் ஊக்குவிப்புச் சலுகை அடிப்படையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளனர்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் கடமையாற்றிய 16 ஆசிரியர்களில் 8 பேர் ஓய்வு பெற்றுள்ளனர்.

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் ஏழு பேர் ஓய்வு பெற்றுள்ளனர்.

அச்சுவேலி மகாவித்தியாலயம், இடைக்காடு மகாவித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து பல ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுள்ளனர்.

## நிதி ஒதுக்கீடு

[கொழும்புத்துறை]

யாழ். மத்திய கல்லூரிக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கல்லூரி அதிபர் நா. க. சண்முகநாதபிள்ளை தெரிவித்துள்ளார்.
[154]


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# எரிகாயங்களுடன் மூவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(வடமராட்சி)

குப்பி விளக்கு கவிழ்ந்ததால் மூவர் எரிகாயங்களுடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். கடந்த 7ம் திகதி திங்கள் இரவு 8.00 மணியளவில் வல்லை நெடியகாடு உ. அ. அதிபர் ஒழுங்கையில் மேற்படி சமபவம் நடைபெற்றது.

திருமதி எஸ். அம்புஜம் (வயது 30) என்பவரது வீட்டின் சமையலறையில் அடுப்பும் குப்பிவிளக்கும் எரிந்துகொண்டிருந்த வேளை எதிர்பாராத விதமாக குப்பிவிளக்கு கவிழ்ந்து எண்ணெய் தரையில் கொட்டியதால் பவளான செல்வி எஸ். பிறேமதரிசி (வயது 12) உடல்முகம் எங்கும் எரியுண்டு மிக ஆபத்தான நிலையில் மந்திகை வைத்திய சாலையிலும் ஆபத்தான நிலையி திருமதி எஸ். அம்புஜம் (வயது30) அவரது மகன் எஸ். சிவராகவன் (வயது6[ ஆகியோரும் எரிகாயங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளனர். [51]

## தபாலகத்தில் ஏழு பேர் ஒய்வு பெற்றனர்

[கொக்குவில்]

கொக்குவில் பிரதம தபால் அலுவலகத்தில் உதவி தபால் அதிபர்களான திரு. சு. சிவபாலசிங்கம், திரு. ஜே. அன்ரனி திரு. ரி. தங்கராசா ஆகியோரும், தபால் ஊழியர்கள் திருவாளர்கள் சு. பஞ்சலிங்கம், இ. பரமேஸ்வரலிங்கம். ச. இராசலிங்கம்' மு. அமிர்தலிங்கம் ஆகிய நால்வரும் ஓய்வு பெறுகின்றனர்.

இவர்களது வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.
(135)

## இராசி பலன்

**16-01-1991**
**புதன்கிழமை**

பிரதமை முழுவதும், உத்தராடம் மு. இ. 10-20 வரை, கரிநாள், இராகுகாலம் பகல் 12-24 முதல் 2-04 வரை, சுப நேரம் காலை 5-04 முதல் 6-34 வரை.

மேடம்: தொழில் லாபம், அந்நியர் பாராட்டு, புதிய முயற்சி, குடும்பத்தில் சுபகாரியம்.

இடபம்; கடமைநளில் தயக்கம், வேலைப்பளு, கடன்சுமை, தொழில் பாதிப்பு, குடும்பக் கஷ்டம்.

மிதுனம்: விரோத மனப்பான்மை, தயாளசித்தை, குடும்பத்தில் சச்சரவு, தொழில் போட்டி, மனச்சுமை.

கடகம்: குடும்பத்தில் மகிழ்ச்சி, அதிகாரிகள் பாராட்டு, புதிய உறவு, தொழில் லாபம், இனசன வரவு.

சிங்கம்: பணியாள் சகாயம், தெய்வீக செலவுகள், தொழில் பிணக்கு, நண்பருதவி, பணப் புழக்கம்.

கன்னி; மறைமுக எதிர்ப்பு, தொழில் கஷ்டம், அந்நியர் தலையீடு, பழைய நினைவுகள், குடும்பப் பிரச்சனை.

துலாம்; வேண்டாத உறவு, கடன்சுமை, நரம்புக்கோளாறு வைத்தியச் செலவு, குடும்பப் பிரிவு.

விருச்சிகம்: மனதில் சந்தோசம், குடும்ப ஒற்றுமை: புத்திரர் செலவு, பிரயாணங்களால் நன்மை.

தனுசு: வீண் செலவு, சொத்துப் பிரச்சனை, அந்நியருதவி, தொழில் கஷ்டம், அதிக யோசனை.

மகரம்: விரோத எண்ணம், மனதில் படபடப்பு, தொழில் லாபம், குடும்ப சந்தோசம், காரிய பலிதம்.

கும்பம்: மனக்குறை, மனைவியால் துன்பம், தொழில் போட்டி, ஆசாரக்குறைவு, பகை.

மீனம்; காரிய தாமதம், குடும்பப் பிரிவு, கண்ணில் ரோகம், அதிகாரிகள் பாராட்டு, பணவரவு.

'ஜோஸ்யர்'

## வீடு உடைத்து திருட்டு

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை – கிழக்கு 5-ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த திருமதி இ. அப்பாத்துரை என்ற வயோதிபமாதுவின் வீட்டை உடைத்து இரு தங்கப்பவுண் நிறையுள்ள சங்கிலி ஒன்றும், நூறு ரூபா ரொக்கப் பணமும் திருடப்பட்டுள்ளன.

கடந்த 9-ம் திகதி புதன்கிழமை இரவு இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

கணவனை இழந்த இவர் தனிமையில் வசித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
(154–க)

## அகதிகளுக்கு அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

பூநகரிப்பகுதிபனம்பொருள் அபிவிருத்தி சபையினர் நாகபடுவானில் பாடசாலையில் தங்கியுள்ள தென்தமிழீழ மக்கள் மற்றும் மன்னார் பகுதிகளைச்சேர்ந்த அகதிகளுக்கு புழுக்கொடியல், பனாட்டு, அரிசி போன்ற பலவகை உணவுப் பொருட்களை வழங்கி உதவியுள்ளது குறிப்பிடத்தக்கது.
(154)

## உதவிப் பணம் பெறலாம்

(பூநகரி)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும் மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் பூநகரி தபாலகத்தில் வந்து பணம் பெற்றுக்கொள்ளலாமென தபால் அதிபர் தெரிவித்தார்.

## இடமாற்றம்

(தென்மராட்சி)

கொடிகாமம் அஞ்சலக அதிபர் திரு. எஸ். சற்குணநாதபிள்ளை இளைப்பாறியதை தொடர்ந்து யாழ். அஞ்சலகத்திலிருந்து திரு. கே. ஞானலிங்கம் கொடிகாமம் அஞ்சலக அதிபராக மாற்றம் பெற்றுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு மகாத்மாஜி சனசமூக நிலைய புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- க. ஜெயச்சந்திரன் செயலாளர் – செல்வன் வ. மயில்வாகனம், உபதலைவர்- நா. நடராஜா, உபசெயலாளர்- ச. மகேஸ்பாலன், பொருளாளர்- செல்வன் இ. ஆம்ஸ்ரோங், வெளிக்கள செயலாளர்- வ. கோபாலபிள்ளை, கணக்குப்பரிசோதகர்- வ. சின்னத்தம்பி. மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஐவர் தெரிவுசெய்யப்பட்டனர்.


## யாழ்ப்பாணம் பல. நோ. கூ. சங்கம் வரையறுக்கப்பட்டுள்ளது

## பதவி வெற்றிடங்கள்

**(1) பதவி-செயலாளர் 114/08**

சம்பளத் திட்டம் – 1005 40 5 50 10 1705
பிணைப்பணம் – ரொக்கப்பிணை ரூபா 5000/-

**கல்வித் தகைமைகள்:**

[அ] கூட்டுறவுப் பணியாளர் 9-வது சம்பளத் திட்டத்தில் அலுவலக உதவியாளர்/ அங்கத்துவ உறவு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 10-வது சம்பளத் திட்டத்தில் மேற்கான் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமைகள்.

அல்லது

[இ] பட்டையம் பெற்ற செயலாளர்கள், நிர்வாகஸ்தர்கள் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில் நுட்ப ஸ்தாபனம் ஒன்றில் செயலாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[ஈ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரப் (உயர்தரம்) / க.பொ.த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் ஸ்தாபனமொன்றில் செயலாளர் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயது எல்லை: 25—50 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது)

**(2) பதவி- வர்த்தக முகாமையாளர் • 106/07**

சம்பளத் திட்டம்: 1105—60 4—75 11—2170
பிணைப்பணம்: ரொக்கப்பிணை ரூபா 5,000/-
ஆதனப் பிணை ரூபா 10.000/-

**கல்வித்தகைமைகள்:**

[அ] கூட்டுறவுப் பணியாளரின் 8வது சம்பளத்திட்டத்தில் முகாமை மட்டப் பதவி அல்லது அத்தகைய மேற்பார்வை மட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர்களின் 9வது சம்பளத்திட்டத்தில் மேற்குறித்த வண்ணம் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமைகளுடன், சந்தைப்படுத்தல்/ வழங்கல் பொருள் விநியோகம்/பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி என்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

[இ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியும், சந்தைப்படுத்தல், வழங்கல் பொருள் விநியோகம்/ பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி என்ற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றின் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

வயது எல்லை: 25 — 50 வரை (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது) கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட யேலதிகப் படிகளும் சேர்த்து வழங்கப்படும், விண்ணப்பப்படிவங்களை சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
பொதுமுகாமையாளர்,
யாழ். ப. நோ. கூ. சங்கம்,
291, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**விண்ணப்பமுடிவுத் திகதி: 31-01-1991**

பொதுமுகாமையாளர்

15-01-1991 [எ 989]



## நினைவுத் திருப்பலி

மறைந்த அருட்திரு. மேரி பஸ்ரியன் அடிகளாரின் 6-ம் ஆண்டு நினைவுப்பலி 17-01-1991 வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும்.

அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

BEAS
செயலர்

(ஏ986)

## நியாய விலையில் பொருள்கள்

மனம் நிலைகுலைந்து விட்டால், வாழ்க்கையே வெறுத்து விடுகிறது! பொருள் பண்டங்களின் விலை, நிலைகுலைந்து விட்டால் நாடு, நகர். வீடு, வாசல்கள் அனைத்துமே நரகமாகி விடுகிறது!

விலைகள் தானாக ஏறி இறங்குவது சகஜம்! வர்த்தகர்கள் வலிந்து விலைகளை ஏற்றிஇறக்கு வது வழக்கம்! ஆனால் எதற்கும் எவருக்கும் அஞ்சாத நெஞ்சம் கொண்டு விலைகளை, வரம்பு எல்லை எதுவுமின்றி உச்சாணிக் கொப்புக்கு உயர்த்துவதோ அதர்மம்!

'தாக்குதல் நிறுத்தம்' கைவிடப்பட்டு தனித்த முயல் அடிக்கும் தக்க சந்தர்ப்பம் தானாகவே வந்துவிட்டது!

இனிமேல் தட்டுப்பாட்டுக்கு ஒருவிலை! தனிப்புக்கு வேறுவிலை! பதுக்கி ஒருவிலை! வதந்தி பரப்பியின்னொருவிலை! கலப்படம் செய்து விட்டும் அதேவிலை! ஊரார் கண்ணைப் பொத்தி 'டபிள்' 'றிபிள்' விலை!

என்ன செய்வது! எப்பவும் எந்த விலையிலும், எவரும் முண்டியடித்து வாங்கவேண்டிய நிர்ப்பந்த நிர்க்கதியான காலம் இதுவாக இருந்தால் வர்த்தக வியாபார விற்பன்னர்கள்கொள்ளையடிக்கும் 'லாபம்' நிட்சயம் பெரும் மிச்சம் தானே!

யார் யாரை எக்கால கட்டத்தில் எந்தவழி மூலம் கொள்ளையடிப்பது என்ற விவஸ்தை இல்லாமலே போய் விட்டது!

வர்த்தக வர்க்கத்தை திருத்த வழிதேடி முழிப்பதிலும் மாற்றுவழி காண முயல்வது உசிதமானது.

''கூட்டுறவு நாட்டுயர்வு'' என்ற இலட்சியத்துடன் உருவான கூட்டுறவு சமாஜமும், கூட்டுறவுக்கடைகளும் இலவச உணவு விநியோகத்தில் காட்டும் அக்கறை பாராட்டப்படக் கூடியதாயினும், நியாய விலையில் பொருள்களை விற்பனை செய்யும் நோக்குடன், நேரடியாகவே பொருள்களைத்தருவித்து விநியோகம்செய்ய முன்வரவேண்டும்!

எதற்கும் காலத்தையும் அரசின் அசமந்த போக்குகளையும் சுட்டிக்காட்டிவாழாவிருக்காது. தனியார் துறையினர் துணிந்து செயற்படுவது போல மனம் வைத்து ஏட்டிக்குப் போட்டியாக பொருள் விநியோகத்தில் இறங்கினால், பொருட்களின் விலைநிலைகுலைவை மட்டுமல்ல, நீதிநியாய மற்ற வர்த்தகர்களின் தொல்லைகளையும் நீக்கி மக்களின் நிம்மதி வாழ்வுக்கு வழிகாணலாம்!

— மயூரன்

## யாழ். மாவட்டத்தில் இரண்டு லட்சம் மாணவருக்கு மதிய போசன உணவு முத்திரை இல்லை

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் இரண்டு லட்சம் மாணவர்களுக்கு இன்றுவரை மதிய போசனமும் உணவுமுத்திரை கொடுப்பனவும் வழங்கப்படவில்லை.

இது பற்றிப் பல பாடசாலைகளின் அபிவிருத்திச்சங்கத்தினர் தொடர்புகொண்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

கல்வி அமைச்சினால் இம் முத்திரைகள் வழங்க அங்கீகரிக்கப் பட்டும் பல மாதங்களாகியும் இவை வழங்கப்படாத நிலையில் இருக்கின்றனவாம்.

கடந்த வருடம்ஜூன்மாதத்துக்குப் பின்னர் பாடசாலைகள் மீண்டும் ஆரம்பித்தபோதும் அந்தத்திட்டம்பற்றி எவரும் அக்கறைகாட்டவில்லை என்று பெற்றோர்கவலை தெரிவித்துள்ளனர்.

இதுவிடயம் குறித்து யாழ். கல்வி அலுவலக அதிகாரிகளிடம் விசாரித்தபோது இந்த முத்திரை வழங்கும்திட்டம் முற்றுமுழுதாக சகல உதவி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (154)

## பிரிவுபசார விழா

(காங்கேசன்துறை)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் அதிபராக இருந்து இளைப்பாறிய திரு. என். ஸ்ரீபுஷ்பநாதனுக்கு கல்லூரி ஆசிரியர் மாணவர்கள் இணைந்து மருதனுமடம் இராமநாதன் கல்லூரியில் பிரிவுபசார விழா ஒன்றை நடாத்தினார்கள். (86)

## கிராமபிரச்சனைகளை அறிவது அவசியம்

(நாவற்குழி)

''போராட்டக்காலத்தில் கிராமங்கள் தோறும் மக்கள் மத்தியிலே பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. ஆனால் அந்தப் பிரசச்னைகளை அறியாமல் பல மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவற்றை அறிந்துகொள்ளவேண்டும், ஒவ்வொருகிராமங்களில் நடக்கின்ற சம்பவங்களையும், செய்திகளையும் சேகரித்து அவற்றினை நன்றாக ஆராய்ந்து அணுகும் போது நாமும் முழுமையடைகின்றோம்.''

கோப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு செ. பாலன், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெற்ற தகவல் மையத்தின் செய்தி சேகரிப்பாளர்களுக்கான கலந்துரையாடலில் மேற்கண்டவாறு கூறினார்.

செய்தி தகவல் மையப் பொறுப்பாளர் திரு. சி. சற்குணசிங்கம் தலைமையில்நடைபெற்ற இக்கலந்துரையாடலில் திரு. பாலன் தொடர்ந்து பேசுகையில்; கிராமங்கள் தோறும் நடைபெறும் சம்பவங்களின் தகவல்கள் மூலம் அவற்றிற்குத் தீர்வு காணுவதன் மூலம் எமது ஈழப்பூமியை மீட்டெடுக்க உதவலாம்.

இக்கலந்துரையாடலில் தகவல் மையப் பொறுப்பாளர் திரு. சி. சற்குணசிங்கம், செய்தித் தகவல் மையத்தைச் சேர்ந்த திரு. ஏ. வி. மாணிக்கமும் உரையாற்றினார்கள். (107)

## யுத்தமும் புத்தமும்

யுத்தத்தில் மாண்ட வீரர்
  தொகை கண்ட கலிங்கமன்னன்
சித்தத்தில் கருணை பொங்க
  இத்தலம் வியந்து நிற்க
யுத்தத்தை வெறுத்து; அன்பு
  கருணையைப் போற்றி நிற்கும்
புத்தத்தைப் பற்றி நின்றான்
  உலகெலாம் புகழ் பெற்றான்.

O

''புத்தத்தைக் காப்போர் நாமே!
  ''புத்தமே நாம்தான்'' என்று
புத்தரே வியக்கும் வண்ணம்
  மெத்தவே சத்தம் செய்வோர்
இத்தலத் துரிமை கேட்கும்
  தமிழரை நசுக்க வேண்டிப்
புத்தத்தை மறைத்து விட்டு
  யுத்தத்தை நடத்து கின்றார்!
யுத்தத்தில் தினமும் தமிழர்
  செத்தொழி வதனைக் கண்டும்
புத்தத்தைப் பற்றி நிற்போர்
  சித்தத்தில் கலக்கம் இல்லை!

O

யுத்தத்தைப் பற்றி நின்றோன்
  சித்தத்தை மாற்றிக் கொண்டு
யுத்தத்தை வெறுத்துக் கொண்ட
  ''அற்புதம்'' நடந்த தங்கே!
புத்தத்தைப் பற்றி நிற்போர்
  புத்தத்தை ஒதுக்கி வைத்து
யுத்தத்தைப் பற்றி நிற்கும்
  ''அற்புதம்'' நடப்பதிங்கே!

'குன்றுதோருடி'

## சுகாதாரம் அவசியம்

(சாவகச்சேரி)

மனிதனுடைய ஆரோக்கியமானவாழ்வுக்குச் சுகாதாரமே முக்கியமானதொன்றாக அமைகின்றது. நாம் ஒவ்வொருவரும் சுத்தமாக சுகாதார முறைகளைக் கடைப்பிடித்து வாழவேண்டும்.

இவ்வாறு சாவகச்சேரி அலுவலகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி திரு. க. கா. சிவபாதசுந்தரம் கூறினார்.

இக்கருத்தரங்கில் சுகாதார வைத்தியர்கள், அதிகாரிகள் குடும்பநல உத்தியோகத்தர்கள், இடம்பெயர்ந்தோர் முகாம் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

## யாழ். செயலகத்தில் பென்சன் வவுச்சர்கள் நேரடியாக வழங்கப்படமாட்டாது

(மானிப்பாய்)

ஒய்வூதியம் பெறுபவர்களின் பென்சன் வவுச்சர்கள் யாழ். செயலகத்தில் நேரடியாக வழங்கப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒய்வூதியப் பிரிவில் வேலைப் பளு காரணமாக தற்போது கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட 3 மாத வவுச்சர்களும் நேரடியாக வழங்கப்படாமல் இன்று முதல் தத்தமது கிராமிய வங்கிகளில் பெற்றுக்கொள்ளலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கிராமிய வங்கிகள் தவிர்ந்த ஏனைய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுபவர்கள் இடம்பெயர்ந்தவராயிருந்தால் தமது பெயர், ஒய்வூதிய இல., வங்கியின் பெயர், தற்போதைய வதிவிடம் என்பனவற்றை இவ் அலுவலகத்தில் பதிவு செய்தால் அவர்களின் ஒய்வூதியப் பற்றுச் சீட்டுகள் தபாலில் அனுப்பப்படாமல் ஒய்வூதியப் பிரிவில் எடுத்து வைக்கப்பட்டு எதிர்வரும் 18ம் திகதியும் அதற்குப் பின்பும் நேரடியாக வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஓய்வு பெற்றார்

(பண்டத்தரிப்பு)

தொல்புரம் சமநலசேவை நிலைய விவசாயப்போதனாசிரியர் திரு. சோ. பத்மநாதன் தமது 33 வருட சேவையிலிருந்து இம் மாதம் தொடக்கம் ஒய்வு பெற்றுள்ளார். (72)

## கிழக்கு அகதிகளுக்கு நிதிஉதவி

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை தொகுதி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் கிழக்கு மாகாண தமிழ் அகதிகளுக்கான நிதிக்கு ஐயாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

சங்கநிர்வாகத்தினால் வழங்கப்பட்ட இந்த நிதியை தவிர சங்கப் பணிப்பாளர்கள் தங்கள் ஒருநாள் சம்பளமான மூவாயிரத்து முன்னூறு ரூபாவையும், சங்க அங்கத்தவர்கள் ஆயிரத்து ஐம்பது ரூபாவையும் மேற்படி நிதிக்கு வழங்கியிருப்பதாக சங்கத்தின்பொது முகாமையாளர் திரு. த. செல்வராஜா தெரிவித்தார். [72]

## என்ன சங்கதி?

சைக்கிள் வியாபாரிகள் தினமும் 90 மைல் பயணம் செய்கிறார்கள். வடமராட்சி, தென்மராட்சியிலிருந்து அரச ஊழியர்கள், வர்த்தகர்கள். மாணவர்கள், ஆசிரியர்கள் தினமும் யாழ்நகருக்கு சைக்கிளில் பயணம் செய்வதுடன், மாணவிகள் கூட சைக்கிளில் தினமும் பலமைல்கள் பயணம் செய்கிறார்கள்.

ஆனால், சில அரச ஊழியர்கள் மட்டும் கடமைக்கு ஒழுங்காக செல்வதில்லை. போக்குவரத்தைக் காரணம் காட்டுகிறார்கள். வேலைக்கு வராவிட்டாலும் சம்பளம் கிடைக்கும் என்ற நம்பிக்கை; அதனால் சம்பள நாட்களில் மட்டும் தவறாமல் வந்துபோகிறார்கள்.

இவர்களின் செயலால் பாதிக்கப்படுவது பொதுமக்களே. தங்கள் அலுவல்களை கவனிக்க தினமும் மக்கள் வந்து, உரிய உத்தியோகத்தர் இல்லாததினால் திரும்ப நேரிடுகிறது.

கிளிநொச்சி திட்டமிடல் பணிமனையில் அநேகர் கடமைக்குவருவதில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது. திட்டமிடல் பணிப்பாளரும் இரு ஊழியரும் மட்டுமே வருகிறார்கள். மற்றவர்கள் வருவதில்லை. ஆனால் மாத முடிவில் சம்பளத்தை பெறவருகிறார்களாம். இப்படி பல காரியாலயங்களில் நடைபெறுகிறது. பொதுமக்கள் நன்மைகருதி ஊழியர்கள் செயலாற்றவேண்டியது அவசியம்.

'ஊரோடி'

## புதிய அதிபர்

[கிளிநொச்சி]

கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாசாலையின் புதிய அதிபராக திரு. சோ. அருளம்பலம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்திலிருந்து இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

திரு அருளம்பலம் கொஸ்லந்தை மகாவித்தியாலயம், மறவன்புலோ சகலகலா வித்தியாசாலை, வவுனியா தவசியாகுளம் பாடசாலை ஆகியவற்றின் அதிபராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. [83]

## பலதும் பத்தும்

### காலன் கொடுத்த இடைவேளை

இந்திய - பாகிஸ்தான் யுத்தம் 1965ல் நடைபெற்றது. இந்த யுத்தத்தை நிறுத்துவதில் சோவியத் யூனியன் முக்கிய பங்கு கொண்டு உழைத்தது. சோவியத் யூனியன் அமைச்சரவைத் தலைவர் கஸிகின் இதற்கான முயற்சியால் 1966 ஜனவரி 10ம் திகதி தாஸ்கண்டில் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இந்த ஒப்பந்தத்தில் கஸிகின், பாரதப் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி, பாகிஸ்தான்பிரதமர் அயூப்கான் ஆகியோர் கைச்சாத்திட்டனர். தாஸ்கண்ட் அறிக்கையை உலகம்மட்டும் மகிழ்ச்சியாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் வேளையில்; கையெழுத்துமை காயமுன்னர் லால்பகதூர் சாஸ்திரி காலமான செய்தி பாரதத்தைப் பெரும் கவலையில் ஆழ்த்தியது: சமாதானத்துக்கு காலன் அளித்த அவகாசம் முடிவடைந்தது.

'ஞானி'

வளைகுடாவில்

# 6,50,00 படையினரை எதிர்க்கும் 5,40,00 ஈராக்கிய வீரர்கள்

(வாஷிங்டன்)

வளைகுடா பகுதியில் குவைத் மீதான ஈராக்கின் ஆக்கிரமிப்பை முறியடிக்க அமெரிக்காவினதும் அதன் நேச நாடுகளினதும் 6 50,000 படைவீரர்கள் தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை குவைத்திலும் 5,40 000 ஈராக்கிய படைகளும் தயார் நிலையில் நிற்பதாகவும் 'பெண்டகன்' தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவ விமானப்படை, கடற்படை வீரர்கள் என 3,60,000 துருப்புகளும் 2, 45,000 ஏனைய நாட்டு படையினரும் இதில் அடங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## வளைகுடா பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் 1,49,000 படையினர் பகுதிநேர கடமைக்காக இந்தப் பிரச்சனை ஆரம்பித்த காலம்முதல் இங்குநிலைகொண்டுள்ளனர். தேவையேற்படும் பட்சத்தில் இது 1.88,000ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

கடற்படை கப்பல்களும் யுத்த விமானங்களும்: 20க்கும் மேற்பட்ட நாசகாரி யுத்தக் கப்பல்கள், 6 விமானம்தாங்கி யுத்தக் கப்பல்கள், 400 யுத்த குண்டுவீச்சு நவீன ரக யுத்த விமானங்கள் (இவை கடற் படைக்கு உரியவை).

விமான பலம்: ஆயிரத்திற்கும் மேற்பட்ட நவீனரக போர் விமானங்கள். இம்மாத முடிவில் இதன் எண்ணிக்கை 1,500 ஆக உயரும். சவூதி அரேபியாவில் மாத்திரம் 1,500 நவீனரக யுத்த ஹெலிகொப்டர்கள் உண்டு.

டாங்கிகள்: 1,000க்கு மேற்பட்ட டாங்கிகள், 2,000 படைக்கல தாங்கிகள். (சவூதி அரேபியாவில் நிற்கின்றன). நூற்றுக்கும் மேற்பட்ட M-1 A 1 டாங்கிகள் ஜேர்மனியிலிருந்து அடுத்த வாரம் இங்கு வந்து சேரவுள்ளன. [சி]

மனிதநேய ரீதியில்

# பொலிஸாரை புலிகள் ஒப்படைத்தனர்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருந்த ஸ்ரீலங்கா பொலிஸ் ஒருவர் விடுதலைப் புலிகளினால் கடந்த திங்கட்கிழமை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டார்.

இம்மாதம் 9-ம் திகதி மாரடைப்பால் காலமான பொலிஸ் சார்ஜன்ட் கருணாரெட்ணாவின் சடலமும் செஞ்சிலுவைச் சங்கத்திடம் அதேவேளையில் ஒப்படைக்கப்பட்டது.

கையளிப்பு வைபவம் விடுதலைப்புலிகள் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நண்பகல் இடம் பெற்றது.

புலிகள் சார்பில் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இ. ராஜன் சடலத்தையும் பொலிஸ் நாகரெட்ணாவையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை பொறுப்பாளர் திரு. பிறட்டிடம் கையளித்தார்.

காலஞ் சென்ற பொலிஸ் சார்ஜன்டின் சடலமும் ஒப்படைக்கப்பட்ட பொலிஸ் காரரும் நேற்று முன்தினம் பிற்பகல் பருத்தித்துறைக் கடலோரத்தில் வைத்து பாதுகாப்புப்படை அதிகாரிகளிடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் கையளிக்கப்பட்டனர். (மா)

## அநாதரவான சிசுவின்சடலம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு செபமாலை மாதா ஆலய முன்றலில் உள்ள காணியில் பெண் சிசுவின் சடலம் ஒன்று அநாதரவான நிலையில் நேற்று கிடக்க காணப்பட்டது.

காகங்கள் சூழ்ந்து நின்று சடலத்தை கொத்திக் கொண்டு நின்றதைக் கண்ட அயலவர்கள் இதுபற்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் பண்டத்தரிப்பு பிரதேச அலுவலகத்தில் முறைப்பாடு செய்தனர். (72)

## இன்று முதல் இயங்கும்

[யாழ்ப்பாணம்]

வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்கம் இன்று முதல் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு முன்னால் கொழுபுத்துறை வீதியில் உள்ள கட்டடம் ஒன்றில் இயங்கவுள்ளது. (க)

# எட்டு லிகிதர்கள் பதவி நீக்கம்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தில் அமய அடிப்படையில் லிகிதர்களாக பணிபுரியும் எட்டுப்பேர் பதவி நீக்கம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கு அடிப்படைத் தராதரம் இல்லை என்ற காரணத்தினால் பதவியிலிருந்து நீக்குமாறு வடக்கு கிழக்கு மாகாணசபையின் உள்துறை அமைச்சு யாழ். அரச அதிபருக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளது. [71]

## பிரான்ஸின்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

ருக்கும் இடையிலான பூசல்களை இணைப்பதாக உள்ளது என்று எதிர்ப்பு நாடுகள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. பந்தோபஸ்து சபையின் கூட்டத்தை ஒத்திவைக்கு முன்னர், பிரான்ஸின் திட்டத்தை ஆராய இந்நாட்டு உறுப்பினர்கள் நேற்றுப் பகல் கூடினார்கள்.

ஐ. நா. அமைதி காக்கும் படையின் மேற்பார்வையில் குவைத்தில் இருந்து கட்டம் கட்டமாக விலக்குவதாக ஈராக் அறிவிக்கவேண்டும் என்று பிரான்ஸ் திட்டம் கூறுகிறது.

நேற்று இரவு வரை அமைதித் தீர்வு காண அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை, ஈராக் தனது படைகளைப் போரிடத் தயார் நிலையில் வைத்திருக்கிறது.

படையினருக்கு ஊக்கமளிக்க ஜனாதிபதி ஹுசைன் தென் முனைக்கு நேற்றுச் சென்றுள்ளார். (மா)

## வீரவணக்கம்

(1ம் பக்க தொடர்ச்சி)

சேர்ந்த பாமதி (சாந்தி யோசேப்) என்ற பெண் போராளி வீரமரணமடைந்தவராவார்.

இவருக்கு புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (வி)

## பொங்கல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக் காலை 10-00 மணியளவிலும் வவுனியாப் பகுதியில் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாக திடீரென இருதடவைகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் இருவர் படுகாயமடைந்ததுடன் பலர் சிறுகாயங்களுக்குள்ளானதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை தைப்பொங்கல் தினமான நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கண்டாவளைப் பகுதியில் ஸ்ரீலங்கா விமானப்படையினரால் விமானத்தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலினால் இப்பகுதியிலுள்ள ராமலிங்கம் என்பவரின் வீடு உட்பட பல வீடுகள் சேதமடைந்துள்ளன. (வி)

## ஊசி மூலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லூரிஉயர்தரவகுப்பு மாணவர் சீனித்தம்பி அழகேந்திரன் (20 வயது) என்பவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவராவர்.

கடந்த மாதம் செட்டிப்பாளையத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினராலும் ரெலோவினராலும் கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட இவர், அங்கு வைத்துத் தாக்கப்பட்டதுடன், இவருக்கு நஞ்சு ஊசியும் ஏற்றப்பட்டது.

விடுதலை செய்யப்பட்ட சில நாட்களின் பின்னர் மாணவர் மயக்கமுற்றதுடன், இறக்கும் தறுவாயில் பெற்றோரிடம் இராணுவம் நச்சு ஊசி ஏற்றிய கொடுமையைக் கூறியுள்ளார். (வி)

# பாடசாலைப் புத்தகங்கள் லங்காசிறியில் வருகிறது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்குத் தேவையான இலவசப் பாடப்புத்தகங்கள் கடல் மார்க்கமாக கப்பலில் எடுத்து வரப்படவுள்ளது.

அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வரவுள்ள லங்காசிறிக் கப்பலிலேயே இந்தப் புத்தகங்கள் எடுத்துவரப்படவுள்ளன.

இக்கப்பலில் யாழ். மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு தேவையான பிறப்பு சான்றிதழ் எழுதும் புத்தகங்களும், இலங்கைவங்கிக்கு 2½ கோடி ரூபா பணமும், எடுத்துவரப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (153)

# மரண அறிவித்தல்

## திருமதி முருகேசு விஜயலெட்சுமி

திருமதி முருகேசு விஜயலெட்சுமி காலமாகிவிட்டார். இவர் இளைப்பாறிய R. M. P. ஆ. முருகேசு அவர்களின் அன்பு மனைவியும், கிருபாலன் (ஜப்பான் ஜுவல்லர்ஸ்), தனபாலன் (நோர்வே), பவாணி, மாலினி ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜெயந்திகுமார் (சீமெந்துக் கூட்டுத்தாபனம் K. K. S.) கிருபாலினி, கலைவாணி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி பொன்னம்பலம் வள்ளிநாயகி, திருமதி லோகநாதன் நகுலாம்பிகை, வேலுப்பிள்ளை அரியரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகன்யா, சுவீதன் ஆகியோரின் அன்புப்பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 234-ம் இலக்க காங்கேசன்துறை வீதி ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (16-1-91) பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: ஆ. முருகேசு.

234, கே. கே. எஸ். ரோட் லேன்,

யாழ்ப்பாணம். [சி 4267]

## செல்லத்துரை ஜெயபாலன்

செல்லத்துரை ஜெயபாலன் (முன்னாள் தயாரிப்பாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்) 10-1-91-ல் கனடாவில் காலமானார். இவர் செல்லத்துரை (இளைப்பாறிய தலைமை ஆசிரியர்), காலஞ்சென்ற நேசம்மா ஆகியோரின் அரிய புதல்வனும், திருமதி கனகரட்ணத்தின் மருமகனும், சுசீலாதேவியின் (கனடா) கணவரும், நீரஜா, மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சகுந்தலா தேவி [கனடா], சரோஜினிதேவி, ஜெயசிங்கம், வண. ஜெயநேசன், ஜெயரூபன் [கனடா], ஜெயரஞ்சன் [கனடா] ஆகியோரின் அன்புச் சகோதரனும், சின்னையா, நாராயணமூர்த்தி [கனடா] தங்கராணி, சாந்தினி, விஜயகுமாரி [கனடா] சுமதி [கனடா] ஆகியோரின் மைத்துனரும் ஆவார். நல்லடக்க ஆராதனை 14-1-91 அன்று கனடாவில் நடைபெற்றது.

தகவல்,
குடும்பத்தினர்.

'தேவி விலா',
பண்டத்தரிப்பு. [சி-4268]

## வளைகுடாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இச்செய்தி அச்சுக்குப்போகும்வரை வளைகுடாப் போரை நிறுத்துவதற்கான சமாதான முயற்சிகள் நடைபெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஐ. நா.வின் காலக்கெடு முடிவடைந்தாலும் உடனடியாக யுத்தம் ஆரம்பிக்கப்படமாட்டாது என்றும் இதற்குப் பின்னரும் சமாதானத்திற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்றும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன. (ரி)

## இராணுவத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது. இடையிடையே சரமாரியான துப்பாக்கிப் பிரயோகமும் இடம்பெற்றது.

பிற்பகல் 3-30 மணியளவில் கட்டுவன் மினி முகாம் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகமும், ஷெல்தாக்குதலும் மேற்கொண்டனர்.

பின்னர் ஹெலிகொப்டர் ஒன்று கட்டுவன், குரும்பசிட்டி, பலாலிப் பகுதிகளில் ரோந்து சுற்றிக் கலிபர் தாக்குதலை நடத்தியது. (86)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81

# கொழும்பு செல்லும் நோயாளரை பதிவுசெய்யுமாறு பணிப்பாளர் கோரிக்கை

(நல்லூர்)

கொழும்புக்கு சிகிச்சைக்காக செல்லவுள்ள நோயாளர்கள் கப்பலில் செல்வதற்கு நாளை 17-ம் தேதியும் 18-ம் தேதியும் காலை 10-00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு சமூகம் கொடுத்து பதிவு செய்து கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பாசண்முகம் கேட்டுள்ளார்.

நோயாளிகளோ அல்லது நோயாளிகளின் நெருங்கிய உறவினர்களோ உரிய ஆவணங்களுடன் குறிப்பிட்ட திகதியில் சமூகம் கொடுக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இதற்கு முன்பு வைத்தியசாலையில் பதிவு செய்துள்ளவரும் மீண்டும் இத்திகதிகளில் வந்து பதிவு செய்து கொள்ளவேண்டும் என்றும் கூடச் செல்பவரின் முழுப் பெயரும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (152)

## விலைவாசி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த மாத முற்பகுதியில் நடத்தப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மலைநாட்டிலும் சத்தியாக்கிரகம் நடத்தத் திட்டமிடப்படுவதாகக் கூறப்படுகிறது.

அண்மைக்கால நடவடிக்கைகளின்போது காணாமல் போனவர்களின் அன்னைமார் பங்குபற்றும் கூட்டம் ஒன்றும் கொழும்பில் நடைபெறவுள்ளதாகத் தெரிகிறது.

ஒரு லட்சம் மக்களைக் கொண்ட எதிர்ப்புக் கூட்டம் நடத்தும் திட்டம் குறித்து கடந்தமாதம் பாராளுமன்றத்தில் நவசமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. வாசுதேவ நாணயக்கார அறிவித்திருந்தார். [150]

## போதிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று மாதத்திற்கு தேவையான எரிபொருள் இருப்பதாகவும் பொதுமக்கள் இதுபற்றி அச்சமடையத் தேவையில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

போதிய எரிபொருள் கையிருப்பில் இருந்தபோதும் எரிபொருள் வழங்குவதற்கு தொடர்ந்து பல நாடுகள் சம்மதம் தெரிவித்திருப்பதால் இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)